உ

கடவுள் துணை.

திருப்போரூர் முருகர்சிந்து.



சென்னை - புரசை

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

68

உ

கடவுள் துணை.

முருகர் சிந்து

இராகம் - தங்கப்பண்.

காப்பு.

சுந்தரமுருகர் சிந்தெனும்பாட்டை
விந்தயதாயுரைக்க விநாயகா
உன்னடியுந்துணையே (க)

திருத்தணிமுருகா திருமகன்மருகா
வருத்தஞ்செய்யாமலிப்போ முருகையா
வந்தெனையாளுமையா (உ)

தணிகாசலவாசா தெய்வானைநேசா
பணியுமடியேனிடர் முருகையா
போக்கியெனையாளுமையா (௩)

எட்டிகுடிவேலா உமையவல்லிபாலா
சிட்டர்தொழுஞ்சீலா முருகையா
சிறியேனைவந்தாளுமையா (௪)

செந்திற்பதியானே சேவற்கொடியானே
இந்திரர்போற்றும்வேள் முருகையா
எளியேனைக்காருமையா (ரு)

சிங்காரவேலா சூரர்கள்காலா
கங்காதரன்பாலா முருகையா
கருணைபுரிந்தாளுமையா (௬)

பழனிமலையாண்டி பாதமதைவேண்டி
தொண்டனடியேனிடர் முருகையா
தொல்வினையைத் தீருமையா (௭)

திருப்போரூரானே திருச்செந்திலூரானே
வருத்தப்படுவோனை முருகையா
வந்தாண்டுகொள்ளுமையா (௮)

சண்முகதேவா சாஹித்யபாவா
உன்மனமும்மிறங்கி முருகையா
உகந்தெனையாளுமையா (௯)

கந்தாகுகனே கதிர்வேல்முருகா
எந்தாயிதும்வதருணம் முருகையா
இணையடிதந்தாளுமையா (௰)

ஆறுமுகநாதா அடியேன்மேல்வாதா
வேறுமுகம்பாராமல் முருகையா
வந்தெனையாளுமையா (௧௧)

உன்பதந்தானே யுறுதியாய்நானே
எண்ணித்துதிப்பதற்கு முருகையா
எண்ணிமனந்தாருமையா (௧௨)

எந்தன் மீதே னித்தனை வாது
சந்ததஞ்செய்யாது முருகையா
சற்றுமுகம்பாருமையா (௧௩)

உனையன்றி வேறே தேவுண்டோ கூறு
எனைவந்தாளுதற்கே முருகையா
இதுசமையம்பாருமையா (௧௪)

உந்தனைத்தேடி உருகிறேன்வாடி
வந்தேனையே நாடி முருகையா
வரமருள்கோடியையா (௧௫)

கல்விப்பொருளால்-கருத்தில்துதிக்கில்
செல்வப்பொருலளித்து முருகையா
செல்வனையாளுமையா (௧௬)

பாவியிலும்பாவி பாரிலுனைத்தாவி
கூவிக்கதறுமுந்தன் முருகையா
குழவியெனையாளுமையா (௧௭)

பவளச்செவ்வாயா பார்புகழ்தூயா
மூவர்கள்சகாயா முருகையா
முத்திதந்தாளுமையா (௧௮)

மாமலர்ப்பாதா மறையவர்போதா
தாமதஞ்செய்யாமல் முருகையா
தமியேனைக்காருமையா (௧௯)

புள்ளிமயிலேறும் வள்ளிமணவாளா
வள்ளிமுகவழகா முருகையா
வடியேனைக்காருமையா (உ0)

சுரர் துதிநாதா நிறைதருபோதா
மருமலர்பாதாவுந்தன் முருகையா
மனமகிழ்ந்தெனையாளையா (உக)

அல்லும்பகலும் அறுபதுநாழிகை
அல்லல்படுமெனையும் முருகையா
ஆதரித்தாளுமையா (உஉ)

விளங்கியவேதம் விண்ணோர்கணிதம்
களங்கமறப்போற்றிப்பதம் முருகையா
காணநாவாருமையா (உ௩)

மதனவினோதா மாமலைநாதா
நிதமலர்கொண்டுபணி முருகையா
நேயனையாளுமையா (உ௪)

நித்தமுனைத்தேடி நேத்திபதம்பாடி
நத்துகின்றவடியேனை முருகையா
நீதியுடனாளுமையா (உ௫)

ஓதுபவர்தங்கள் உள்ளத்திருக்கும்
வேதப்பொருளேயெந்தன் முருகையா
வினைதீரப்பாருமையா (உ௬)

ஸ்ரீ

முருகர் சிந்து.

அள்ளியிடுநீரா அறுமுகத்தீரா
துள்ளிமயிலேறிவந்தே முருகையா
தொண்டனைக்காருமையா (உஎ)

அஞ்ஞானந்தன்னை அகலும்படிக்குன்னை
மெஞ்ஞானத்தாயறுக்கும் முருகையா
மைந்தனெனையாளுமையா (உஅ)

வேதவிநோதா வேந்தர்கணீதா
நாதாவுன்பாதமதை முருகையா
நம்பினேனாளுமையா (உகூ)

கன்னியரைக்கண்டுகாமன்கணைகொண்டு
உன்னிடபதமறந்து முருகையா
உன்றனருள் தாருமையா (ஙம)

மங்கையரைப்பாராமல் மயங்கித்திரியாமல்
தங்கத்திருவடிகள் முருகையா
தந்தாண்டுகொள்ளுமையா (ஙக)

ஐம்புலனாலே அன்பாயுன்மேலே
தென்பாகயான்பாட முருகையா
துன்பமதைத்தீருமையா (ஙஉ)

ஆனந்தமாக அடியேனுக்காக
தானந்தமாகவந்து முருகையா
தமியேனைக்காருமையா (ஙங)

பாலன்படுந்துயரம் பாரெல்லாம்புகழும்
கோலப்பதந்தந்து முருகையா
குறைவின்றியாளுமையா (௰௪)

நலிந்துமெலியாமல் நாடோறும்வாடாமல்
கலியனும்வாராமல் முருகையா
காப்பதுன்பாரமையா (௰௫)

சிறியேன்யானும் செய்தபிழைதானும்
கருணையுடன்பொருத்து முருகையா
கனிவோடிரட்சியுமையா (௰௬)

வஞ்சகந்திர வடியேன்கடைத்தேற
கொஞ்சங்கடைக்கண்வைத்து முருகையா
கிருபைபுரிந்தாளுமையா (௰௭)

சம்சாரந்தன்னில் சார்ந்துவுலகில்
இம்சைப்படுமென்னையும் முருகையா
ஈடேறப்பாருமையா (௰௮)

அன்னைதந்தைநீ ஆதரிப்பாயே
உன்னையன்றிவேறுதுணை முருகையா
ஒருவருமில்லையையா (௰௯)

பத்தியாயுன்னை போற்றவுமென்னை
சத்தியமாகவுந்தன் முருகையா
சித்தம்வைத்தாளுமையா (௨௰)

முருகர் சிந்து.

பொன்னுலகத்தில்புரந்தரனைக்காத்ததுபோல்
என்னையுமேகாத்துன் முருகையா
இன்பம்வைத்தாளுமையா (௪௧)

நிலைமையாயுன்னை நினைத்தோர்கடம்மை
உலகிலலையாமல் முருகையா
உறுதியுடனாளுமையா (௪௨)

கோழிக்கொடிபிடிக்க குன்றுபோல்வந்துநீ
ஆபத்தைத்தீர்த்திடுவாய் முருகையா
அடியேனையாளுமையா (௪௩)

சத்திவடிவேலெடுத்த-சங்கரனார் தன்மகனே
பத்தியுடனன்றெழுதேன் முருகையா
பட்சம்வைத்துகாருமையா (௪௪)

வள்ளிமணவாளா வர்ணமயில்வீரா
புள்ளிமயிலேறிவரும் முருகையா
பெட்புடன்காருமையா (௪௫)

பாசமுடனாடும்-பக்த்தர்பவமோடும்
தலம்துதிகந்தப்பன்பாடும் முருகையா
தமிழ்க்கருள் தாருமையா (௪௬)

முருகர்தங்கப்பண்சிந்து

முற்றிற்று.